# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 05 புதன்கிழமை 21.08.2024 கதிர் 338







# வடக்கு வைத்தியசாலைகளுக்கு ஆளுநர் விடுத்துள்ள அறிவிப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் முறைப்பாடுகளுக்கான தொடர்பிலக்கங்கள் அடங்கிய அறிவிப்பு பதாதை காட்சிப்படுத்தப்பட வேண்டும் என வடக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள், அரச மருந்தகங்கள் ஆகியவற்றில் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல் அடங்கிய பாதாதைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மாகாண சுகாதார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

2➤



# தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் அரச நிதி

## நாடாளுமன்றத்தில் சஜித் பிரேமதாச



“தேர்தல் காலங்களில் அரச நிதியை தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது சட்டவிரோதமான குற்றமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

‘ரிஷாட் பதியுதீன் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்து கொண்டமையால் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியை இரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 300 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர்” என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

‘இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருக்குமாறு அரச அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். சட்ட விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு தலையீடு செய்ய வேண்டும்’ என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

# மக்கள் போராட்ட முன்னணி யாழ்ப்பாணத்தில் பிரசாரம்



மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேயை ஆதரித்து இன்று யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இன்று காலை 09.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமான குறித்த பிரசார நடவடிக்கை யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்று குழு உறுப்பினர் வசந்த முதலிகே, புதிய சனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கலந்துகொண்டு மக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கியிருந்தனர்.

(01)

# வைத்தியரின் அலட்சியத்தால் வவுனியா வைத்தியசாலையில் குழந்தை இறந்தது

## தந்தை பொலிஸில் முறைப்பாடு

வவுனியா வைத்தியசாலை வைத்தியர் ஒருவரின் அலட்சியத்தால் தனது குழந்தை பிறந்து இறந்துள்ளது என்று குழந்தையின் தந்தையால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் இன்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மரணித்த சிசுவின் தந்தையார் தெரிவிக்கும்போது,

“வவுனியா, செட்டிகுளம், பிரமனாலங்குளம் பகுதியில் வசிக்கும் நாம் எனது மனைவியைப் பிரவசத்துக்காகக் கடந்த 17 ஆம் திகதி வவுனியா வைத்தியசாலையின் 7 ஆம் விடுதியில் அனுமதித்திருந்தேன். மறுநாள் அவருக்கான மருந்துகள் வழங்கப்பட்ட நிலையில் அவரது பன்னீர்குடம் உடைந்திருந்தது. இதனைத் தாங்க முடியாத எனது மனைவி அங்குள்ள தாதி ஒருவருக்கு விடயத்தைத் தெரிவித்திருந்தார். இதன்போது அங்கு கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் தொலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டு, அது தொடர்பாக கவனமெடுக்காமல் அது ஒரு பிரச்சினையுமில்லை என்று தெரிவித்திருந்தார். பின்னர் வலிக்குரிய மருந்தை மனைவிக்குக் கொடுத்துவிட்டு உறங்குமாறு அவர்கள் தெரிவித்திருந்தனர். மறுநாள் வைத்தியசாலைக்கு வந்த வைத்திய அதிகாரி ஒருவர் சீசர் செய்து குழந்தையை எடுத்திருக்க லாம்தானே எனக் கடமையில் இருந்த வைத்தியரைப் பேசியிருந்தார். பின்னர் மீண்டும் மாலை 5 மணிக்கு எனது மனைவியை சிகிச்சைக்கூடத்துக்கு அழைத்துச் சென்றிருந்தனர். பலமணி நேரமாகியும் அவர் வெளியில் வரவில்லை. இதற்குள் 7ஆம் விடுதியில் குளிஷரூட்டி இயங்கவில்லை எனத் தெரிவித்து 5 ஆம் விடுதிக்கு எனது மனைவியை மாற்றியிருந்தனர். பின்னர் தாதி ஒருவர் தொலைபேசி அழைப்பை எடுத்து என்னை வைத்தியசாலைக்கு வருமாறு அழைத்திருந்தார். அங்கு சென்றபோது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் எனது குழந்தையை அனுமதித்திருந்தார்கள்.

அங்குள்ள வைத்தியரிடம் கேட்டபோது, “5 ஆம் விடுதியில் இருந்து குழந்தையை இங்கு அனுமதிக்கும்போதே உயிரில்லாத நிலைமையிலேயே தந்தனர். இருப்பினும் குழந்தையின் இதயத்துடிப்பை நாம் மீட்டுள்ளோம். எனினும், குழந்தையின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது” - என்று தெரிவித்து குழந்தையை எனக்குக் காட்டியிருந்தனர். பின்னர் நேற்று இரவு எனது குழந்தை இறந்துவிட்டது என்று தெரிவித்தனர். எனவே, வைத்தியர்களின் அசமந்தப்போக்கால் எனது மனைவிக்கு நடந்த கொடுமைக்கு அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். எனக்கு நீதி கிடைக்காமல் நான் சிசுவின் சடலத்தைப் பொறுப்பெடுக்கமாட்டேன்.” - என்றார். இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக சிசுவின் தந்தையால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் சுகுணனிடம் கேட்டபோது, “இது குறித்து உள்ளக விசாரணை இடம்பெற்று வருகின்றது” - என்று தெரிவித்தார்.

# தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழர்கள் ஒன்றுதிரண்டு வாக்களிக்க வேண்டும்

## மட்டு ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தெரிவிப்பு

"இலங்கையில் தமிழர்கள் பூர்வீகக் குடிகள். அவர்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கு இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் உரிமை உண்டு. தமிழர்களின் பொதுக் கட்டமைப்பு அரியநேத்திரனை தமிழ் தேசியத்தின் ஓர் அடையாளமாக தேர்ந்தெடுத்திருக்கிறது" என்று தெரிவித்த மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகை, "ஆதலால் தமிழ் தேசியத்தினர் அவரை முழுமையாக ஆதரிக்க வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

ஆயர்ஜோசப்பொன்னையா ஆண்டகை இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் தேசியத்தினர் இதுவரை 8 சிங்களத் தலைவர்களை ஜனாதிபதி ஆக்குவதற்கு வாக்களித்துள்ளார்கள். வாக்குகளைப் பெற்று பதவியில் அமர்ந்தவர்கள் யாருமே தமிழ் தேசியத்தின் குறைகளை அல்லது கஷ்டங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை" என்றும் சுட்டிக்காட்டினார்.

"இன்னுமின்னும் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டுமா என்று தமிழ் தேசியம் கேட்பதில் தவறேதுமில்லை" என்றும் தெரிவித்த ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை, "தமிழ் தேசியம் ஒரு சிறுபான்மை இனம். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப் போவதில்லை" என்றும், "ஆயினும் இவ்வளவு காலமும் ஜனாதிபதியாக இருந்த சிங்களத் தலைவர்கள் விட்ட பிழைகளை சுட்டிக்காட்டுவதற்கான ஒரு செயற்பாடே தமிழ் பொதுக் கட்டமைப்பினர் அரிய நேத்திரனை தெரிவு செய்துள்ளார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த தமிழ் பொதுக் கட்டமைப்பினர் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளிலும் கலந்து கொள்ள வேண்டும்" என்றும் வலியுறுத்திய ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை, "ஒரு நல்ல தீர்க்கமான முடிவை ஒவ்வொரு விடயத்திலும் வெளிப்படையாகக் கலந்து பேசி எடுக்க வேண்டும்" என்றும் தமிழ் பொதுக் கட்டமைப்பினர் சிரஞ்சீவியாக நிலைத்து நிற்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.



### வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், நோயாளர்களும், வைத்தியர்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சேவையை பெற்றுக் கொள்வதில் தாமதம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய உயர் அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள் ஆகியன குறித்த பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் அறிவித்தல் பதாதையில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும், பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார துறை உயர் அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

அத்துடன் ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் "அபயம்" பிரிவின் தொலைபேசி இலக்கமும் அறிவித்தல் பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நோயாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதோடு, அவர்களுக்கான சேவையை உறுதிப்படுத்த சுகாதார துறையினர் மேலும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிகாட்டியுள்ளார்.

(01)

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97 ஆவது ஜனன தின நிகழ்வு யாழில்

இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவும் திகழ்ந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் 97 ஆவது ஜனன தின நிகழ்வு வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் அமைந்துள்ள ரிம்மர் மண்டபத்தில் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தமிழ்நாடு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கலந்துகொண்டு நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

ஓய்வு நிலை மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபை ஆயர் அதி.வண. கலாநிதி வி.பத்மதயாளன் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

# கொழும்பு வந்த அமெரிக்க கப்பல்

அமெரிக்காவின் யு.எஸ்.எஸ் ஒகேன் (USS O'kane) என்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இன்று புதன்கிழமை வருகை தந்த யு.எஸ்.எஸ் ஒகேன் கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் மரபு ரீதியான வரவேற்பை அளித்தனர்.

இந்த கப்பல் 154 மீட்டர் நீளமுடையது. அத்துடன், கப்பலில் 328 பணியாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

அமெரிக்காவின் கடற்படைத் தளபதிகளில் ஒருவரான ரிச்சர்ட் ரேயின் (சுஐஉாயசன சுயல) தலைமையில் இந்தக் கப்பல் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த கப்பலின் வந்தமைக்கான நோக்கம் தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை






# மழையும் காற்றும் 3 நாள்கள் தொடரும்

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் காற்று வேக மாறுபாடு காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மழை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது. யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா இதனைத் தெரிவித்தார். குளிரான வானிலை நிலவும் அதேவேளை மிதமான வேகத்துடன் கூடிய காற்றும் வீசுவதற்கான வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# எரிவாயு சிலிண்டர் சின்னத்தை ரணிலுக்கு வழங்கியது தவறு

## விஜயதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



"உள்ளூராட்சி மன்ற தேர்தல் இன்னும் முடிவடையாத நிலையில் அந்த தேர்தலில் ஒரு குழுவுக்கு வழங்கிய எரிவாயு சிலிண்டர் சின்னத்தை ஜனாதிபதி தேர்தலில் வேறு ஒருவருக்கு வழங்குவது சட்ட விராதேமாகும்" என்று தெரிவித்த தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ, "என்றாலும் தேர்தல் ஆணைக்குழு தவறு என்று தெரிந்துகொண்டும் அதனைச் செய்திருக்கிறது" என்று தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள தன்னுடைய தேர்தல் காரியாலயத்தில் தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நேற்று நடத்தினார். அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், "உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்துள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் தேர்தல் முடிவடையவில்லை" என்றும், "இந்நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் குழுவொன்றுக்கு எரிவாயு சிலிண்டர் தேர்தல் சின்னமாக தேர்தல் ஆணைக்குழு வழங்கியிருக்கும் நிலையில், தற்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் வழங்கி இருப்பது சட்டவிராதே செயலாகும்" என்று குற்றஞ்சாட்டினார்.

"அதேநேரம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்று முடிந்திருந்தால், அந்த தேர்தலில் போட்டியிட்ட குழுவுக்கு வழங்கியிருந்த தேர்தல் சின்னத்தை இந்த தேர்தலில் வேறு வேட்பாளருக்கு வழங்குவதில் தவறு இல்லை" என்றும் தெரிவித்த விஜயதாச ராஜபக்ஷ, "உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் முடிவடையவில்லை. அதனாலே ஒரு குழுவுக்கு வழங்கிய தேர்தல் சின்னத்தை வேறு ஒரு வேட்பாளருக்கு வழங்க முடியாது" என்று குறிப்பிட்டார்.

"இதனை அடிப்படையாகக்கொண்டு தேர்தலை பிற்போடுவதற்கு முடியாது. தேர்தல் ஆணைக்குழுவின் ஒரு சில கருத்துக்களால் ஆணைக்குழு தொடர்பில் மக்களுக்கு இருந்துவந்த நம்பிக்கை இல்லாமல் போயிருக்கிறது. தேர்தலை உரிய காலத்தில் நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் கடமை. அவ்வாறு இல்லாமல், நீதிமன்ற தடை

உத்தரவுகள் வராவிட்டால், தேர்தல் நடந்தே ஆகும் என தெரிவிப்பது, மக்களை குழப்பும் நடவடிக்கையாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.






# மிதி வெடி

என்ன? எல்லாரும் எப்பிடி இருக்கிறியள்? டாக்குத்தரின்ட திரு விளையாடல் எங்க வந்து நிக்குது எண்டு பாத்தியள் தானே? நான் ஆரம்பம் முதல்கொண்டு தலை, தலையா அடிச்சனான் பாருங்கோ…. கொஞ்ச நாளில எல்லாரும் விளங்கிக் கொள்ளுவயள் எண்டு, ஆனா இவ்வளவு கெதியாப் "பூதம்" தலை காட்டும் எண்டு நான் கூட நினைக்கேல்ல பாருங்கோ….

தன்னையும், தன்ர பதவியையும் தக்க வைச்சுக் கொள்ளுறதுக்காக அந்த "ஐயா" என்ன வேணும் எண்டாலும் செய்வார், ஆரோட வேணுமெண்டாலும் கூட்டணி வைப்பார் எண்டு சொன்னனான் தானே? இயக்கத்தை உடைச்சவர், தமிழரைப் பிரிச்சவர், முஸ்லீம்களையும் விட்டு வைக்கேல்ல…. இப்பப் பாத்தியள் எண்டா மலையகக்காரரையும் முழுங்கி ஏப்பம் விடத்தான் போறார் போல கிடக்கு….

இன்னுமொரு விசியம் தெரியுமே? உந்த டாக்குதர் மாரின்ர விளையாட்டெல்லாம் நான் விலாவாரியா ஆறு மாசத்துக்கு முன்னமே சொன்னான் எல்லே? நீங்கள் எல்லாரும் இப்பத் தான் உந்த "மாஃபியா" எண்ட சொல்லக் கேள்விப்படுறியள். நான் எப்பவோ சொன்னனான். எல்லாம் "பிளான்ட்" ஆ சேர்ந்து செய்யுற விளையாட்டுப் பாருங்கோ…..

எங்கட பெரியாசுப்பத்திரியைப் பொறுப்பெடுக்கேக்க அந்த "மருத்துவர்" நல்லவராத் தான் வந்திறங்கினவர். ஆனா, அவர் வர முதல் என்னென்ன செய்தவர், அங்க எப்பிடி அவரை வச்சிருந்தவை எண்டதெல்லாம் தெரிஞ்ச ஒரு சிலரைக் கேட்டியள் எண்டா உங்களுக்கு உவற்றை வண்டவாளம் தெரியும்.

வந்த தொடக்கத்தில "புதுத் தும்புத் தடி" நல்லாக் கூட்டுமாப்போல காட்டினவர்… ஆனா உள்ளுக்குள்ளால டீல் பேசிக் கொண்டு… தனியார் மருத்துவ "மாஃபியா" வை ஒழிச்சுக் காட்டுறன். "அரசாங்கச் சம்பளத்தை எடுத்துக் கொண்டு வேற வேலை எப்பிடிச் செய்யலாம்?" எண்டெல்லாம் "பப்ளிக்"ல "பீலா" விட்டுக் கொண்டு தான் மட்டும் " ஸ்பொன்சர்ட் புரொஜெக்ட்" செய்து பணம் பண்ணத் தொடங்கீற்றார். "சுவிஸ்" எண்டும் "யூ.எஸ்" எண்டும் காசு கையில பிளங்கத் தொடங்கக் கண் கடைதெரியாமல் போயிற்று….

பிறகென்ன…. "பழைய குருடி கதைவைத் திறவடி"… தான். "மாஃபியா"க்களக் கண்டும் காணாமல் விட்டது மட்டுமில்லாமல், முந்தின போலவே, புதுசா வாற…. தன்னலம் பாக்காத ஒருத்தரையும் இங்க விட்டு வைக்காமல் "கிளப்பி" அனுப்பிறதில குறியா இருக்கிறார்.

இதை நான் சொல்லேல்ல போன வாரம் ஒரு நிகழ்வில ஒரு டாக்குத்தரே சொல்லி இருக்கிறார்… அதுவும் ஒரு பொது நிகழ்வில…. வாற வருசத் தொடக்கத்துக்குள்ள யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில கருத்தரிப்பு - மகப்பேற்று சிகிச்சை நிலையம் ஒண்டு அமைக்கப்படாட்டில் தான் சாப்பிடாமல் இருந்து செத்துப் போடுவன் எண்டு அந்த டாக்குத்தர் சொல்லி இருக்கிறார்.

அந்த மனுசனைக் கையெடுத்துக்கும்பிடாத சனம் இல்லை எண்டு சொல்லலாம்…. லச்சக் கணக்கா, கோடிக் கணக்கா கெட்டிக் குடுத்து வெளிநாட்டிலயும், உள்ளூரிலயும் கருத்தரிப்பு செய்ய வேண்டின நிலமை இருக்கேக்க ஒரு சதம் காசு செலவில்லாமல் யாழ்ப்பாணத்திலேயே அதைச் செய்விக்கலாம் எண்டு "புஷரூப்" பண்ணினது அந்த மனுசன் தான்… அந்தாளுண்ட வசதிக்கு ஏற்ற போல ஒரு "பிள்ளைப்பெறு" விடுதியை அமைச்சுக் குடுக்க இந்தாளுக்கு மனசு வருகுதில்லை பாருங்கோ….

நீங்களே சொல்லுங்கோ…. "மனம் உண்டானால்… இடம் உண்டு" தானே? தனக்குத் தேவையான ஆக்கள் எண்டால் தலையால கிடங்கு கிண்டி - "சுவிஸ்" காசோ, "யூ.எஸ்" காசோ தெண்டித் தேவையானதெல்லாம் செய்து, "பெயின்ற்"ல இருந்து பெட்டி வரை "கொமிசன்" வாங்கி… எல்லாத்தையும் கச்சிதமாச் செய்து முடிப்பாராம்.

அவருக்கு மனம் மட்டும் இடங்கொடுக்காட்டி ஒரு "இஞ்ச்" கூட நகரமாட்டினம்…. இதில ரெண்டு மாங்காய் அடிக்கலாம் பாருங்கோ… ஒண்டு வேண்டாதவைய (யாழ்ப்பாணம் ஆசுப்பத்திரிய விட்டு) விலக்கி வைக்கிறது…. ரெண்டாவது… வெளியில செய்யுற சிகிச்சை எல்லாத்தையும் இங்க தொடக்கி விட்டுட்டால் வெளி "மாஃபியா"க்களைப் பகைக்க வேண்டி எல்லே வந்திடும்? அப்பப் பாருங்கோவன்…?

வைத்தியர்களான.. ஜெயக்குமார், உமாபதி, முகுந்தன், காண்டீபன் எண்ட "லிஸ்ற்" ல இந்தாளையும் சேர்க்கத் தான் போயினம் போல….?

நரமுனி

# கொக்குத்தொடுவாயில் மேலும் பல இடங்களில் புதை குழிகள்?



துரைராசா ரவிகரன்



கொக்குத்தொடுவாய் பகுதியில் பல இடங்களில் புதை குழிகள் இருக்கிறது என்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்து.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

"கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயமானது ஆரம்பத்திலே நீதிமன்றத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போது பலராலும் வைக்கப்பட்ட கோரிக்கை சர்வதேச பொறிமுறையோடு சர்வதேசத்தினுடைய கண்காணிப்பே வேண்டும் என்பதாகும்.

யாழ் பல்கலைக்கழக தொல்லியல் பீட துறையினை சேர்ந்த மாணவர்களோ, பேராசிரியர்களோ இந்த கண்காணிப்பில் பார்வையிடுதலில் இருக்க வேண்டும். அந்த கோரிக்கைகள் பலவாறாக முன்வைக்கப்பட்டது. இருந்தும் இவை நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை.

இரண்டு, மூன்று நாட்கள் தொல்லியல் துறை சார்ந்த பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் வந்திருந்தார். ஆனால் அவரும் பின்னர் வரவில்லை. ஏனோ தெரியவில்லை. இருந்தாலும் எங்களுக்கு இந்த உள்ளக பொறிமுறையில் நம்பிக்கை இல்லை.

இலங்கை அரசாங்கமானது எத்தனையோ படுகுழிகளை இலங்கை அரசாங்கத்தினுடைய பார்வையில், கண்டுபிடிக்கப்பட்டும் ஒன்றுக்கும் நீதியான, நேர்மையான வகையில் அறிக்கைகள் வரவில்லை .

1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கர்நாட்டுக்கேணி ஆகிய 6 கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த மக்களும் இடம்பெயர்ந்து 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தான் மீள்குடியேற்றப்பட்டார்கள். இப்படி இருக்கும்போது இப்பிரதேசம் இராணுவ பிரதேசமாக இருந்தது.

2009 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்ட, உறவுகள் வட்டுவாகலில் , கடலில், முகாமில் என்று பலவாறு கையளிக்கப்பட்ட உறவுகள் , சரணடைந்தவர்கள் இந்த புதைகுழியில் அகப்பட்டிருக்கலாம் என்பது மக்களுடைய நம்பிக்கை. எங்களுடைய நம்பிக்கை.

அப்படி இருக்கும்போது அகழ்வை செய்து இப்போது முடிந்துவிட்டது என கூறிகின்றார்கள்.

கொக்குத்தொடுவாய் பகுதியில் பல இடங்களில் இப்படிப்பட்ட புதை குழிகள் இருக்கிறது என்பது இந்த மக்களுடைய கருத்து. ஆனால் இதற்கான ஒரு நீதி கிடைக்க வில்லை.

உள்ளக பொறிமுறையிலே மக்கள் யாருக்குமே நம்பிக்கை இல்லை. யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை அரசாங்க தரப்பினர் முழு பொய்யுரைப்பவர்களாகத்தான், பொய்களை பேசி வருகின்றார்கள் அறிக்கை இடுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்கான நியாயமான எந்த ஒரு கருத்துக்களும் வழங்கப்பட்டதா, என பார்க்க வேண்டும். எங்களுக்கு சர்வதேச பொறிமுறையூடாக நீதி கிடைக்க வேண்டும்.

எத்தனை தாய்மார் குழந்தைகளை தேடி, பிள்ளைகளை தேடி இறந்து விட்டார்கள். இப்படியான நிலமையில் அவர்களுடைய ஏக்கம், அவர்களுடைய கண்ணீர், இவற்றிற்கு பதில் கூறியே ஆக வேண்டும். எங்களை ஏமாற்ற வேண்டாம். ஆனால் சர்வதேசம் நிச்சயமாக கண்காணித்து நியாயமான தீர்ப்புகளை வழங்க வேண்டும்" என்று ரவிகரன் மேலும் தெரிவித்தார்.



# இலங்கை - இந்திய பாலம் அமைத்தால் இலங்கை பாதுகாப்பு பாதிக்கப்படுமா?

## உயர் ஸ்தானிகரை குடைந்த மல்வத்து மகாநாயக்கர்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலத்தை நிர்மாணித்தால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் மல்வத்து பீட மகாநாயக்கர் திப்படுவாவே சிறீ சுமங்கல தேரர் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாலம் அமைக்கும் பணிகள் எவ்வாறு உள்ளன, அதனால் இலங்கையின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுமா, கேரள கஞ்சா போன்ற பொருட்களை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு அது பயன்படுத்தப்படுமா என்று பல கேள்விகளை அவர் அடுத்தடுத்து இந்திய உயர் ஸ்தானிகரிடம் நேற்று தொடுத்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்றைய தினம் கண்டிக்கு விஜயம் செய்து பௌத்த மதத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இதன்போது நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக்கப்படவிருப்பது குறித்தும் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டது.

முதலில் மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவேவ சிறி சுமங்கல தேரரை இந்திய உயர் ஸ்தானிகர் சந்தித்தார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக்கப்படுவதற்கான திட்டம் பற்றிக் குறிப்பிட்ட மகாநாயக்கர், "பாலம் அமைக்கும் பணி எவ்வாறுள்ளது? அதனால் இலங்கையின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

"இது இன்று நாளை நிறைவுபெறக்கூடிய ஒரு திட்டமல்ல" எனப் பதிலளித்த இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, "இதனைத் திட்டமிடுவதற்கும் அது தொடர்பாகப் பேசுவதற்கும் இன்னும் இரண்டு வருடங்களாவது தேவைப்படும்" என்று குறிப்பிட்டார்.

"இது ஒரு நீண்டகாலத் திட்டம்" என்றும் சுட்டிக்காட்டிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, "இது இலங்கைக்கு பாதகமானது. இந்தியாவுக்கு சாதகமானது என்று சிலர் கூறுகின்றார்கள். ஆனால் அது அவ்வாறு அல்ல" என்று விளக்கினார்.

"இலங்கையுடன் இணைந்தே அனைத்துப் பணிகளும் முன்னெடுக்கப்படும்" என்றும், "இதன்மூலம் இலங்கைக்கு நிதி கிடைக்கும். பல திட்டங்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும்" என்றும் மல்லத்து மகாநாயக்கருக்கு இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா விளக்கினார்.

இதற்கு பதில் கேள்வி எழுப்பிய மல்வத்து மகாநாயக்கர், இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு செல்வதற்கு என்ன இருக்கின்றது? என்று கேட்டபோது பதிலளித்த இந்திய உயர் ஸ்தானிகர், "அன்பு இருக்கின்றது. அதனைக் கொண்டு செல்லலாம்" என்று பதிலளித்தார்.

"இந்தியாவிலிருந்து பெருமளவு கேரள கஞ்சா கொண்டுவரப்படுகின்றது. வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் போது அது போன்றவை அதிகளவுக்கு இங்கு கொண்டுவரப்படுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்துவிடும் அல்லவா?" என்று மல்வத்து மகாநாயக்கர் அடுத்த வேள்வியைத் தொடுத்தார்.

இதற்குப் பதிலளித்த இந்திய உயர் ஸ்தானிகர், "திருடர்கள் கதவின் ஊடாக வருவதில்லை. ஜன்னலூடாக குதித்துத்தான் வருவார்கள் என்று பழமொழி ஒன்றுள்ளது" என்று சுட்டிக்காட்டியதுடன், திருடர்கள் பாலம் கட்டப்பட்டிருப்பது என்பதற்காக சட்டபூர்வமாகக் கொண்டு வரப்போவதில்லை. பாலம் அமைக்கப்படுவதால் அவ்வாறு நடைபெறும் என்று சந்தேகிக்கப்படத் தேவையில்லை" என்று விளக்கினார்.



# அன்னமலையில் களைகட்டிய மாணவர் சந்தை!






சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்யாலயத்தின் மாணவர் சந்தை அதிபர் பொன். பாரதிதாசன் முன்னிலையில் சிறப்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாணவர்களின் சந்தை அறிவு அனுபவம் அங்கே பெற்றோர்களின் உதவியுடன் நிறைய வெளிப்பட்டது .

மாணவர் சந்தையைப் பார்வையிட வந்த பலர் அங்கு மாணவர்கள் காட்சிப்படுத்திய சந்தைப் பொருட்களை மனமுவந்து கொள்வனவு செய்தார்கள். ஒரு சில மணி நேரத்தில் மாணவர் சந்தை நிறைவுக்கு வந்தது.

அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்பட்டு விட்டது.

பெற்றோர்களின் பங்களிப்பு பூரணமாக இருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.







## நீலையூர் சுதாவின் 'கொத்து வேலி' நூல் அறிமுக விழா

கிழக்கு மாகாண மீன்பிடி பணிப்பாளர் சி. சுதாகரன் (நீலையூர் சுதாவின் ) 'கொத்து வேலி' கவிதை நூல் அறிமுக விழா எதிர்வரும் 24 - 8 - 2024. சனிக்கிழமை, காலை 10 மணிக்கு இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில், உவெஸ்லி உயர்தர பாடசாலை முன்னாள் அதிபர் வ.பிரபாகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை,' 76 சி' நண்பர்கள் வட்டத்தினதும், கல்முனை வடக்கு கலாச்சார பேரவையினதும் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இந் நிகழ்வில் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்த ஜீ மகராஜ் (உதவி பொது முகாமையாளர் இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு) கலந்து ஆசி வழங்குவார்.

முதன்மை அதிதியாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தியில் ஒரு சகாப்த காலத்துக்கு மேல் தன்னை அர்ப்பணித்து செயல்பட்டவரும், கவிஞரும் எழுத்தாளருமான வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன். (மேலதிக மாகாண பணிப்பாளரும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மட்டக்களப்பு) மற்றும் பல அதிதிகளும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.






## பிரபல கலைஞர் இராஜசேகரன் காலமானார்

பிரபல கலைஞரும் வெள்ளி நிலா கலாலயத்தின் ஸ்தாபகரும் விவாக பதிவாளருமான லயன். ஆர்.இராஜசேகரன் நேற்று செவ்வாய்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

சினிமா, மேடை நாடக, தொலைக்காட்சி நாடக நடிகரான ராஜசேகரன், தமிழ் இளையர் கலாசார கூட்டமைப்பின் நிறுவனர்களில் ஒருவருமாவார்.

தன்னுடைய வாழ்நாள் முழுவது இலங்கையின் கலைத்துறைக்கு பெரும் பங்களிப்பாற்றிய அன்னாரின் மறைவு இலங்கையின் கலைத துறைக்கு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## கிண்ணியாவில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கிண்ணியா பொலிஸ் பிரிக்குட்பட்ட, ஆலாங்கேணி பிரதேசத்தையும் பைசல் நகர் பிரதேசத்தையும் இணைக்கின்ற பாலத்தடியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

கிண்ணியா, மஹரூப் நகர், 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான முஹம்மது லெப்பை முபாரக் (60 வயது) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.

நேற்று மாலை 5.00 மணிக்கு கடைக்கு செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டு, வந்தவர் என்று ஆரம்பகட்ட விசாரணையின் போது தெரிய வந்திருப்பதாகவும், இரவு 7 மணி அளவில் சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

சடலம் கிண்ணிய வைத்திய சாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2024இல் வெளியிடப்பெற்றது.